# செய்திக் குறிப்பு

## தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களுக்கு 2009-10 ஆம் ஆண்டிற்கான போனஸ் அறிவிப்பு

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 2009-10 ஆம் ஆண்டிற்கான போனஸ் வழங்குவது குறித்து மின்சார வாரியத் தலைவர், மின்வாரிய அதிகாரிகள் மற்றும் மின்வாரிய அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. தமிழ்நாடு மின்வாரியத்தின் தற்போதைய நிதி நிலையினை கருத்தில் கொண்டு 2009-10 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஊழியர்களுக்கு 20 சதவிகிதம் போனஸ் மற்றும் கருணைத்தொகை (போனஸ் 8.33 % மற்றும் கருணைத்தொகை 11.67 %) வழங்குவது என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஒப்புதலுடன் அறிவிக்கப்படுகிறது. இதனால் 69,621 ஊழியர்கள் பயனடைவார்கள். மேலும், 2009-10 ஆம் ஆண்டில் மின்வாரியத்தில் பணியாற்றிய சுமார் 9,600 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் 5,516 பகுதி நேர ஊழியர்களுக்கும் தலா ரூ.1,500/– கருணைத்தொகையாக வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன், இதனால் மின்வாரியத்திற்கு இவ்வாண்டு ரூ.60.75 கோடி கூடுதலாகச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

18/10

ஆற்காடு நா. வீராசாமி,
அமைச்சர் / மின்சாரத் துறை

www.tnebes.org